


திருவாரூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு, மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பாக மாவட்டச்செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் மலர்மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நகரச்செயலாளர் வாரைபிரகாஷ், சுற்றுச் சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் மீனாட்சி சூரியபிரகாஷ், துணை அமைப்பாளர்கள் தினேஷ் குமார், ஐயப்பன், நகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கோ வரதராஜன், துணை அமைப்பாளர்கள் இளையராஜா, ஆனந்தையா, தினேஷ் குமார், விக்னேஷ், தாஸ், சம்பத், சங்கர், வணிக குரல் கருணாநிதி, ஒன்றிய சுற்றுச்சூழல் அமைப்பாளர் செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள், கார்த்தி, சக்திவேல், அன்பழகன், காத்தையன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழா! கோவை அரசு மருத்துவமனைக்கு

# 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்கள் இரத்த தானம் வழங்கினர்!

## கோவை மாநகர மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தகவல்!

கோவை, ஜூலை 15-

முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்கள் இரத்த தானம் வழங்கினர் என்று மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

முத்தமிழறிஞர், செம்மொழிக் காவலர், கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு 11.07.2025, வெள்ளிக்கிழமை, காலை 09.00 மணியளவில் வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., தளபதி இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற முகாமில் கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என 500 க்கும் மேற்பட்டவர்கள் இரத்ததானம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந. உதயகுமார், ஆடிட்டர் சசிகுமார், நோயல் செல்வம், மு.மா.ச.முருகன், ச.குப்புசாமி, ச.கார்த்திகேயன், தங்கம் சந்திரசேகர், பகுதி கழக பொறுப்பாளர்கள் சிங்கை மு.சிவா, எஸ்.எம்.சாமி, கஸ்தூரி அருண், துரை செந்தமிழ்ச் செல்வன், மா.நாகராஜ், ப.மோகன்ராஜ், ப. அன்பழகன், ஆ.கண்ணன், என்.ஜே.முருகேசன், பாபு (எ) பாலகிருஷ்ணன், மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், இலா.தேவசீலன், டெம்போ சிவா, சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள் இரா.தனபால், நா.பாபு, சிவப்பிரகாஷ், கே.ஆர். ராஜா, சிவராமன், கண்ணதாசன், வி.மணி, ராஜ்குமார், கராத்தே அர்ஜுனன், சி.ஆர்.கனிமொழி, வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், இரத்ததான தன்னார்வலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் கூறியதாவது :-

திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலே சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களுடைய நல்ஆதரவை பெற்ற நல்லாட்சி நாயகன், தலைவர் தளபதி அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், திராவிட இயக்க இளைய தலைவர் அன்புக்குரிய துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலிலும், கோவை மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலிலும் தொடர்ந்து கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர், செம்மொழி காவலர், தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை மிகச் சிறப்பான முறையிலே நாங்கள் கொண்டாடி வருகின்றோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள், இரத்ததான முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை நாங்கள் செய்து வருகின்றோம். அந்த வகையிலே தளபதி இரத்ததான இயக்கத்தின் சார்பிலும், கோவை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் தலைவர் கலைஞர் அவர்களுடைய பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் கோவையிலே இருக்கக்கூடிய கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள், கழக உடன் பிறப்புகள், பொதுமக்கள் பங்கேற்கக்கூடிய வகையில் இரத்ததான முகாம் நடைபெற்று வருகிறது. இந்த ரத்ததான முகாம் காலை 8 மணிக்குத் தொடங்கி மதியம் 1 மணி வரை நடைபெற்றது.

இந்த இரத்ததான முகாமில் கிடைக்கும் அனைத்து இரத்தங்களும் கோவை அரசு மருத்துவமனைக்கு தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். தளபதி இரத்ததான இயக்கம் சுமார் 20 ஆண்டு காலமாக பீளமேடு பகுதியிலே செயல்பட்டு வருகிறது. தளபதி இரத்ததான இயக்கத்தின் சார்பில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாள் விழா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழா, கழக இளைஞர் அணிச் செயலாளர் பிறந்த நாள் விழா என தொடர்ந்து இது போன்ற முகாம்களை நடத்தி வருகின்றோம். தளபதி இரத்ததான இயக்கத்தில் 10,000 க்கும் மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கடந்த 20 வருட காலமாக இரத்ததானம் செய்பவர்களின் பட்டியல் எங்களிடத்தில் இருக்கிறது. பல வகையான இரத்த வகைகளைச் சார்ந்தவர்கள் அதிலே உறுப்பினர்களாக அங்கம் வகிக்கிறார்கள். இந்த முகாமில் மட்டும் நாங்கள் இரத்த தானத்தை வழங்குவதில்லை, தொடர்ந்து தினமும் கோவையைச் சுற்றியிருக்கக் கூடிய பல்வேறு மருத்துவமனைகள் அதாவது தனியார் மருத்துவமனையாக இருக்கலாம், அரசு மருத்துவமனையாக இருக்கலாம் எந்த மருத்துவமனையாக இருந்தாலும் அவசர சிகிச்சைகளுக்காக மக்களுக்குத் தேவையான இரத்தத்தை நாங்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றோம். தினமும் 5 முதல் 10 நபர்களுக்கு எங்கள் தளபதி இரத்ததான இயக்கத்தின் சார்பிலே இரத்தங்களை தானமாக வழங்கி வருகின்றோம். குறிப்பாக இங்கு இருக்கக்கூடிய மருத்துவ மனைகளில் உள்ள மருத்துவர்களே நோயாளிகளுக்கு அவசர சிகிச்சைக்கு இரத்தம் வேண்டும் என்று சொன்னால் உடனே தளபதி இரத்ததான இயக்கத்தை தொடர்பு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்கள் எங்களின் அலைபேசி எண்களை கொடுத்து விடுவார்கள். அவர்கள் என்னை தொடர்பு கொள்வார்கள் அல்லது இந்த இரத்ததான முகாமை தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகின்ற

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை செயற்குழு உறுப்பினர், வே.பாலசுப்ரமணியம், அவரோடு சேர்ந்த சில நண்பர்கள் மணிகண்டன் உள்ளிட்டவர்களிடம் தொடர்பு கொண்டு இரத்தத்தை தானமாக பெற்றுக் கொள்வார்கள். இந்த தளபதி இரத்த தான இயக்கம் என்பது தொடர்ந்து 20 ஆண்டுகாலமாக குறிப்பாக சிங்கா நல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இந்தப் பகுதியிலே கோவை மாவட்டம், வெளி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள், பிற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் யார் இங்கு சிகிச்சைக்கு வந்தாலும் அவர்களுக்கு இரத்தம் தேவைப்பட்டால் இரத்தத்தை தானமாக வழங்குகின்ற மிகச் சிறந்த பணியினை செய்து வருகின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.




பாரத ஸ்டேட் பாங்க் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டமைப்பின் கூட்டம் தஞ்சாவூரில் அதன் தலைவர் எஸ்.பி.இராமன் தலைமையில் நடந்தது.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர், கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., தளபதி இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்ததானம் வழங்கும் முகாம் மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக் தலைமையில், வே.பாலசுப்பிரமணியன், இரா.மணிகண்டன், இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முகாமில் 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்கள் இரத்த தானம் அளித்தனர்.

### 8 லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு

# ஓய்வூதிய மறுசீரமைப்பையும் கருணைத் தொகை உயர்வையும் இந்திய வங்கிகள் நிர்வாகம் உடனே வழங்க வேண்டும்!

## பாரத ஸ்டேட் பேங்க் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர் கூட்டமைப்பு வலியுறுத்தல்!

தஞ்சாவூர், ஜூலை. 15–

பாரத ஸ்டேட் பேங்க் முன்னாள் தொழிற்சங்க தலைவர்கள் கூட்டமைப்பின் ஒன்பதாவது பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூர் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க மாளிகை, சரோஜ் நினைவகத்தில் ஜூலை 13ல் நடந்தது. பொதுக்குழு கூட்டத்துக்கு அமைப்பின் தலைவர் எஸ்.பி. இராமன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் டி.வி.சந்திரசேகரன், துணைச் செயலாளர் எம்.முருகையா, உதவி பொருளாளர் வீபூமிநாதன், ஸ்டேட் பேங்க் ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் டி.சிங்காரவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வருகை தந்த அனை வரையும் நிர்வாகக்குழு உறுப்பினர் எம். சந்திரா கில்பர்ட் வரவேற்றார். என். பாண்டுரங்கன் நன்றியுரை நிகழ்த்தினார். ஆழ்ந்த விவாதங்களுக்கு பிறகு நாட்டின் நலன், சமுதாய நலன், வங்கி ஓய்வூதியர் நலன் ஆகியவை குறித்த கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1995 ஆம் ஆண்டு நாடாளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஓய்வூதிய விதி முறைகள் 35(1) இன் படி, வங்கித்துறையில் ஊதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும் ஒவ்வொரு தருணத்திலும் ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவில் நடைமுறையில் உள்ள விகிதப் படி வங்கி ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் சீரமைத்து உயர்த்தி தரப்படவேண்டும் என்ற விதி முறையை நிறைவேற்றாமல் கடந்த முப்பது ஆண்டுகளாக எட்டு லட்சம் வங்கி ஊழியர்களுக்கு தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் வரலாற்று அநீதியை உடனே களைய இந்திய வங்கிகள் சங்கத்துக்கு அரசு தாமதமின்றி அறிவுறுத்த வேண்டும்.

இயற்றப்பட்ட சட்டத்தை நிறைவேற்ற நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளை ஏற வங்கி நிர்வாகங்கள் ஓய்வூதியர்களை நிர்ப்பந்திக்காமல் தாமதமின்றி பென்சன் மறு சீரமைப்பையும், ஆண்டு தோறும் கருணைத் தொகை உயர்வையும் இந்திய வங்கிகள் சங்கம் (IBA) வழங்க ஒன்றிய அரசு வழிவகை செய்ய வேண்டும்.

நிதித்துறையில் தனியார் மயத்தை தவிர்த்து பொதுத்துறை வங்கிகளை பலப்படுத்த ஒன்றிய அரசு முன்வரவேண்டும்.

வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்ட தன் நோக்கங்களை பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்தி விடக்கூடாது. எந்த சூழலிலும் பொதுத் துறை வங்கிகள் மற்றும் இன்சூரன்ஸ் துறைகளை தனியார் மயமாக்கும் எண்ணத்தை ஒன்றிய அரசு முற்றிலுமாக கைவிட வேண்டும்.

ஒருங்கிணைந்த தொழிலாளர் நல சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஜி.எஸ்.டி மற்றும் பல்வேறு வரிகளை குறைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த ஒன்றிய அரசு முன் வர வேண்டும்

மகத்தான மக்கள் சேவையாற்றி வரும் பொதுத்துறை அமைப்பான எல்.ஐ.சி யை பலவீனப்படுத்தும் மசோதாக்களை ஒன்றிய அரசு கை விட வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பங்கேற்றோர்

பொதுக்குழுக் கூட்டத்தில் AFCCOM அமைப்பின் செயலாளர் எம்.கே.மூர்த்தி, நிர்வாகக்குழு உறுப்பினர் கோவை எம்.ரகுநாதன், வேலூர் ஆர்.லோகநாதன், பரவை எஸ்.பாலசுப்பிரமணியன், நாகர் கோயில் அகமது ஹுசைன், சென்னை எஸ்.ரத்தின வேல் ஆகியோர் கலந்து கொண்டனர். பாரத ஸ்டேட் பேங்க் ஒரத்தநாடு கிளையின் முன்னாள் செயலாளர் வி.சம்பத், வடக்கூர் கிளையின் முன்னாள் செயலாளர் ஆர்.சந்திரசேகரன் ஆகியோர் பொதுக்குழு கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.